**லங்காபுர பிரதேச சபை**
**பொலன்னறுவை மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 28 ஆந் திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2018 செப்தம்பர் 19 ஆந் திகதி தலைவருக்கு அனுப்பிவைக்கப்பட்டது

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து லங்காபுர பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினனயும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டுக் கொள்கைகள்

களஞ்சிய பொருட்கள் சம்பந்தமாக பின்பற்றப்பட வேண்டிய களஞ்சிய முற்பணக் கணக்கு முறைமை பின்பற்றப்பட்டிருக்கவில்லை.

#### 1.3.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் கணக்கீட்டுக் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டிற்கு உரித்தான செலுத்தவேண்டிய மொத்தம் ரூபா 156,703 செலவு விடயங்கள் 03 இன் நிலுவை செலவினத்தின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) மீளாய்வாண்டிலே செயற்திட்டத்திற்காக செலுத்தவேண்டிய மொத்தம் ரூபா 850,081 வேலை கடன்கொடுத்தோர் மீதிகள் 02 கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது.

(இ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதி சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த 03 செயற்திட்டங்களுக்காக செலுத்த வேண்டிய ரூபா 424,058 தொகை கடன்கொடுத்தோர் மீதிகளின் கீழ் கணக்கு வைக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் மின்சார களஞ்சிய ஏட்டின் படி மொத்தம் ரூபா 47,770 பெறுமதியான 06 அலகுக்கு உரிய பொருட்கள் கணக்குகளில் கைவிடப்பட்டிருந்தது.

(உ) சபைக்கு சொந்தமான புலஸ்திம நீர் இறைக்கும் நிலையத்திற்காக கொள்வனவு செய்யப்பட்டிருந்த ரூபா 48,645 பெறுமதியான பெனல் போர்ட் ஒன்றின் பெறுமதி மூலதனமாக்கப்படவில்லை.

(ஊ) சபைக்கு சொந்தமாக இருந்த அரிசி மா உணவு உற்பத்திசாலையில் 2017 யூன் 02 ஆந் திகதியில் காணப்பட்ட ரூபா 55,129 பெறுமதியான கையிலுள்ள தொகை நலன்புரி சங்கத்திற்கு கையளிக்கப்பட்டிருந்த போதும் அத்தொகை நீக்கப்பட்டிருக்கவில்லை.

(எ) சபைக்கு சொந்தமான பிலிசரு செயற்திட்டத்திற்காக மின்சார வளங்களை பெற்றுக்கொள்வதற்காக செலுத்தப்பட்ட ரூபா 111,456 தொகை மூலதனமாக்கப்பட்டிருக்கவில்லை.

(ஏ) சேவையாளர்கள் கடன் ஏட்டின் அடிப்படையில் மீளாய்வாண்டிலே சேவையாளர்கள் கடன் மீதி ரூபா 1,937,572 ஆக இருந்தாலும் நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 1,815,944 ஆக காணப்பட்டதால் சேவையாளர் கடன் மீதி ரூபா 121,628 குறைவாக காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஐ) 2016 ஆம் ஆண்டிற்குரிய பொருட் கணக்கெடுப்பின் போது இனங்காணப்பட்ட நூலக புத்தகங்களின் குறைபாடான ரூபா 103,995 ஆன தொகை சொத்துக் கணக்கில் நீக்கப்பட்டாலும் மூலதன ஈடுபாட்டின் போது வருமானத்திற்கு பங்களிப்பு செய்கின்ற கணக்கில் நீக்கப்பட்டிருக்கவில்லை.

(ஒ) முன்னைய ஆண்டிற்குரிய பொருட் கணக்கெடுப்பின் போது நீக்கப்பட்டிருந்த ரூபா 92,975 பெறுமதியான நூலக புத்தகங்களின் பெறுமதி மூலதன ஈடுபாட்டின் போது வருமானத்திற்கு பங்களிப்பு செய்கின்ற கணக்கிற்கு வரவு வைக்கப்பட வேண்டுமெனினும் வருடத்தின் செலவாக கணக்கு வைக்கப்பட்டிருந்தது.

**1.3.3 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் 31 கட்டிடங்களுக்குரிய உப ஏடுகளில் காணப்படும் மீதிகளின் பெறுமதி மற்றும் நிலையான சொத்துக்களின் ஏடுகளில் காணப்படும் பெறுமதிகளுக்கிடையில் ரூபா 1,502,186 வேறுபாடொன்று நிலவியது.

(ஆ) மீளாய்வாண்டிலே திசெம்பர் 31 ஆந் திகதியில் வைப்புக்கள் ஏட்டிலே கையில் வைத்திருக்கும் 3 மீதிகளின் பெறுமதிகள் குறிப்பிடப்பட்டிருக்கவில்லையெனினும், நிதிக்கூற்றுக்களின் அடிப்படையில் அந்த மீதிகளின் பெறுமதி ரூபா 30,000 ஆகும்.

(இ) நிலையான சொத்துக்கள் மற்றும் மூலதன ஈடுபாட்டின் போது வருமானப் பங்களிப்பு செய்கின்ற கணக்கின் மீதிக்குமிடையில் ரூபா 10,891,980 வேறுபாடொன்று காணப்பட்டது.

**1.3.4 பெற வேண்டிய கணக்குகள்**

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள பெற வேண்டிய 3 கணக்குகளின் மீதிகளின் பெறுமதி ரூபா 1,601,879 ஆக இருந்ததுடன் கால பகுப்பாய்வின் படி 5 வருடங்களுக்கு அதிக காலத்திலிருந்து பெறவேண்டிய மீதிகள் ரூபா 1,453,230 ஆக இருந்ததுடன் 3 வருடங்களுக்கு அதிகமான மீதிகள் ரூபா 63,571 ஆகும்.

(ஆ) 2017 திசெம்பர் 31 ஆந் திகதியாகும்போது அறவிடமுடியுமான உபயோக சேவை ரூபா 117,194 மீதிக்குள் உள்ளடங்கியுள்ள 2005 வருடத்திலிருந்து ரூபா 60,563 வாகன நட்ட சேதமும், 1999 வருடத்திலிருந்து ரூபா 40,000 மறுக்கப்பட்ட காசோலையும் 2007 ஆம் ஆண்டிலிருந்து ரூபா 2,700 கணனி தரவு இயக்குனரின் சம்பளமும் அறவிடப்பட வேண்டியருந்தும் அந்த பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.3.5 கணக்காய்விற்கு தேவையான எழுத்துமூல சான்றுகள் இன்மை

தளபாடங்கள் பொருத்துக்கள் கணக்கு, நூல் நிலைய புத்தகக் கணக்கு, நிலுவையாக உள்ள கூலி வருமானக் கணக்கு சேவையாளர்கள் பிணை வைப்புக் கணக்கு மற்றும் நிலுவையாக உள்ள நீர் வருமானக் கணக்கு ஆகிய கணக்குகளின் மொத்தமான ரூபா 7,802,608 மீதிக்கு பொருத்தமான தகவல்களை முன்வைக்காததன் காரணமாக கணக்காய்வின் போது திருப்திகரமாக பரீட்சிப்பதற்கு முடியாதிருந்தது.

### 1.3.6 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை**

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| | சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|---|
| (அ) | 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டத்தின் 134 ஆவது பிரிவு | பிரதேச சபையின் தல்பொத நகரம் முன்னேற்றமடைந்த பிரதேசமாக அறிவிக்கப்பட்டு 2014 ஆகஸ்ட் 29 ஆந் திகதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அனுமதி பெறப்பட்டிருந்தாலும் இதுவரை வரி அறவிடப்படுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ஆ) | 1990 ஒக்டோபர் 10 ஆந் திகதிய 41/90 அரச நிர்வாகச் சுற்றறிக்கை | தகைமையுள்ள இயந்திர பொறியியலாளரின் அறிக்கையொன்றை பெற்றுக்கொள்ளாமல் ட்ரெக்டர் ஒன்று திருத்தம் செய்யப்பட்டு ரூபா 113,000 செலுத்தப்பட்டிருந்தது. |
| (இ) | 2015 திசெம்பர் 04 ஆந் திகதிய மாகாண சபையின் ஆணையாளரின் கடிதம் | 2015 திசெம்பர் மாதம் முதல் செயலாளர்களுக்கு வழங்கப்பட்ட கெப் வாகனத்திற்காக மாதம் ஒன்றிற்கு உயர்ந்தபட்ச எல்லையான 150 லீற்றர் எரிபொருள் உட்படுத்தப்பட்டிருந்தாலும் மீளாய்வாண்டிலே அந்த எல்லையை விஞ்சி 1990 லீற்றர் எரிபொருளுக்காக ரூபா 189,050 செலவிடப்பட்டிருந்தது. |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 9,566,538 ஆக இருந்ததுடன், அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 18,743,422 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்குரியதாகச் சமர்ப்பிக்கப்பட்டிருந்த மதிப்பிடப்பட்ட வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| | | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | வருமானம் | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பிடப்பட்ட வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| i | வீதவரியும் வரியும் | - | - | - | - | - | - | - | - |
| ii | வாடகை | 11,213,067 | 10,185,867 | 10,893,867 | 2,139,526 | 4,963,691 | 4,080,491 | 4,700,191 | 2,423,085 |
| iii | அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,330,650 | 1,129,975 | 1,129,975 | - | 1,222,150 | 942,210 | 942,210 | - |
| iv | ஏனைய வருமானம் | 8,179,750 | 4,589,047 | 9,217,684 | 2,578,995 | 8,333,730 | 6,127,433 | 2,967,798 | 7,569,921 |
| | | 20,723,467 | 15,904,889 | 21,241,526 | 4,718,521 | 14,519,571 | 11,150,134 | 8,610,199 | 9,993,006 |

#### 2.2.2 வாடகை

(அ) சோமாவதிய வணக்க பூமியின் வாகனத் தரிப்பிடத்திற்காக 25 சதவீத மீதமாகவுள்ள டென்டர் கட்டணமான ரூபா 186,500 பணம் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதியாகும் போது செலுத்தி முடிந்திருக்க வேண்டுமெனினும், 7 மாதங்களுக்கு அதிகமான காலம் டென்டர் எடுத்தவரினால் கட்டணங்களை செலுத்துவதற்கு கணக்கில் எடுக்கப்படாதிருந்ததுடன், அதற்காக அறவிடப்பட வேண்டிய ரூபா 32,330 தாமதக் கட்டணத்துடன் நிலுவையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) வருமான ஆவணக்கோப்பு காணாமல் போனதன் காரணமாக 2017 சனவரி 01 ஆந் திகதியில் ரூபா 101,265 நிலுவையான உள்ள இறைச்சிக்கடை வருமானம் சம்பந்தமாக மற்றும் அந்த ஆவணக்கோப்பு நடவடிக்கைக்கு பொறுப்பான விடய பொறுப்பு உத்தியோகத்தர் சம்பந்தமாக எவ்வித செயல்நடவடிக்கையும் எடுத்திருக்கவில்லை.

(இ) 2012 ஆம் ஆண்டிலே வாராந்தசந்தை குத்தகை வழங்கலுக்காக பெறப்பட வேண்டிய ரூபா 5,000 பணத்தை அறவிடுவதறகு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை

### 2.2.3 அனுமதிப்பத்திரக் கட்டணம்

(அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிர்வாகம்) 59 விதியின் பிரகாரம் வேலை சம்பந்தமான கணக்கெடுப்பொன்றை நடாத்தி, அதன்படி அனுமதிப்பத்திரக்கட்டணத்தை அறவிட்டிருக்கவில்லை.

(ஆ) 90 முச்சக்கர வண்டிகளிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 90,000 ஆன முச்சக்கர வண்டிகளின் பதிவுக் கட்டணம் மீளாய்வாண்டிற்குள் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 2.2.4 ஏனைய வருமானம்

(அ) லங்காபுர பிரதேச சபைக்கு சொந்தமான பெகோ லோடர் இயந்திரம் கூலி அடிப்படையில் வழங்கப்பட்டு சபைக்கு அறவிடப்பட வேண்டிய ரூபா 76,076 தொகையை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஆ) அரிசி மா உற்பத்தி வெதுப்பகத்தின் மீளாய்வாண்டிலே சனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களின் முறையே ரூபா 9,661 வும் ரூபா 62,807 வும் ரூபா 55,862 வும் தேறிய நட்டம் ஏற்பட்டிருந்தது.

(இ) அதிகாரத்திற்குட்பட்ட பிரசேதத்திற்குள் வெவ்வேறு 30 நிறுவனங்களினால் காட்சிப்படுத்தப்பட்டிருந்த 173 விளம்பர அறிவித்தல் பலகைகளினால் அறவிடப்பட வேண்டிய அறிவித்தல் பலகை வருமானம் அறவிடப்பட்டிருக்கவில்லை

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 03 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல்கள் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

#### (அ) உப விதிகள்

பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பந்தியின் பிரிவின் கீழ் 55 பிரதான விடயங்களை நிறைவேற்றுவதற்காக அவசியமான உப விதிகள் விதிக்கப்பட வேண்டியிருந்தும் உப விதிகள் விதிக்கப்படாமலிருந்ததுடன் 2016 மார்ச் 30 ஆந் திகதி 1960/35 ஆம் இலக்கமுடைய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டிருந்த 1952 இன் 6 ஆம் இலக்கமுடைய மாகாண சபைகள் அமைச்சரினால் (ஒப்புக்கொள்ளப்பட்ட உபவிதிகள்) சட்டத்தின் பிரகாரம் வட மத்திய பிரதான அமைச்சரினால் செய்யப்பட்ட உபவிதிகளை எடுத்துக்கொள்வதற்கு 2017 திசெம்பர் 06 ஆந் திகதி நிர்வாகக் குழுவில்தான் தீர்மானிக்கப்பட்டிருந்தது.

(ஆ) **செயல் நடவடிக்கைத் திட்டம்**

விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் படி சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த 53 வேலைகள் செயற்பாடுகளை நிறைவேற்றுவதற்கான விபரங்கள் அடங்கிய செயல்நடவடிக்கைத் திட்டம் மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) **நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) ஐக்கிய நாடுகளின் அமைப்பின் மூலம் வெளிப்படுத்தப்பட்ட நிலைபேறான அபிவிருத்தியின் நோக்கங்கள் சம்பந்தமாக சபை அறிவித்திருந்த போதிலும், அந்த நோக்கங்களுக்கிடையில் சபைக்கு பொருத்தமான நோக்கங்களை சரியாக இனங்கண்டிருக்கவில்லை.

(ii) பாதீட்டை தயாரிக்கும் போது தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 2017 யூலை 31 ஆந் திகதிய BD/CBD/4/1/2-2018 ஆம் இலக்கமுடைய சுற்றறிக்கையின் படி இனங்காணப்பட்டிருந்த குறிகாட்டிகளுக்கான தரவுகளை ஒன்றுசேர்க்கும் முறைமையொன்று சபையினுள் காணப்படவில்லை.

(iii) அபிவிருத்தி இலக்குகளை அண்மிக்கும் போது உரிய காரியங்களை மேற்பார்வை செய்வதற்கான இடங்களை இனங்கண்டிருக்கவில்லை என்பதுடன் குறிகாட்டிகளுக்கான தரவுகளை ஒன்றுசேர்க்கும் முறைமையொன்றும் காணப்படவில்லை.

(iv) இலக்குகளை அண்மிப்பதற்காக 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பாதீட்டின் மூலம் ரூபா 1,036,000 கூட்டுத்தொகை ஏற்பாடு செய்யப்பட்டிருந்த போதிலும், அதில் செலவு செய்யப்பட்டிருந்தது. ரூபா 285,000 ஆகும். இது 27 சதவீதம் மட்டுமாகும்.

(v) நிலைபேறான அபிவிருத்தியின் இலக்குகளை நோக்கி அண்மிப்பதற்காக நிறுவனங்களின் பதவியணியினரை பயிற்றுவிக்கும் முறைமையொன்று காணப்படாதிருந்ததுடன் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்வதற்காக தொடர்புகளை வைத்திருக்கவேண்டிய ஏனைய அரச நிறுவனங்களை இனங்கண்டிருக்கவுமில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

(அ) சபையினால் பாவனைக்கு உட்படுத்தப்படுகின்ற ஆனால் நிதி அமைச்சின் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ள டபல் கெப் வாகனத்தின் உரிமையை சபைக்கு மாற்றிக் கொள்வதற்கான நடவடிக்கைகள் எடுத்திருக்கவில்லை.

(ஆ) கொம்போஸ்ட் உரமாக உருவாக்கப்படுகின்ற குப்பை கூளங்களை சரியான முறையில் பொதிசெய்து விற்பனை செய்வதற்கு நடவடிக்கை எடுக்காததன் காரணமாக வபைக்கு கிடைத்திருக்க வேண்டிய வருமானமொன்று இழக்கப்பட்டிருந்தது.

(இ) 2017 கிராமிய வீதிகள் அபிவிருத்தி வாரத்திற்காக (மாகாண சபைகள் வீதிகள் வாரம்) 57.8 கிலோமீற்றர் வீதிகளை கிரவல் இட்டு அபிவிருத்தி செய்வதற்காக ஏற்பாடுகள்

ஒதுக்கப்பட்டிருந்தாலும் கிரவல் இடாமல் மோட்டார் கிரேடர் இட்டு மற்றும் நீர் இறங்குவதற்கு வடிகால் அமைக்கப்பட்டு மாத்திரம் இடம்பெற்றிருந்தது.

### 3.3 மனிதவள முகாமைத்துவம்

**ஊழியர் வெற்றிடங்கள் மற்றும் மிகை**

(அ) மீளாய்வாண்டிலே மூன்றாம் நிலைக்குரிய செயலாளர் பதவி, இரண்டாம் நிலைக்குரிய 04 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பதவிகள், 02 முகாமைத்துவ உதவியாளர் பதவிகள், 03 நூலகர் பதவிகள் மற்றும் 01 வேலை பரீட்சகர் பதவி என்பன வெற்றிடமாகக் காணப்பட்டன.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் எண்ணிக்கைக்கு மேலதிகமாக நீர் தொழிலாளர் ஒருவரும், ஆயுர்வேத தொழிலாளர் ஒருவரும், காரியாலய காரிய உதவியாளர் ஒருவரும் மற்றும் நூலக உதவியாளர் ஒருவரும் சேவைக்கு உள்வாங்கப்பட்டிருந்தனர்.

### 3.4 செயற்பாட்டு செயற்றிறனின்மைகள்

**நீர் செயற்திட்ட பரீட்சித்தல்**

2011 ஆம் வருடத்திலே பிரதேச சபை நிதியத்தை பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட தேவாலய கட்டிடத்தின் நீர் செயற்திட்டம் தற்போது 02 வருட காலத்திற்கு முன்பிருந்து கைவிடப்பட்டிருந்தது. அந்த செயற்திட்டத்தின் மோட்டார் தற்போது செயலிழந்து காணப்பட்டதுடன் கிணறு மற்றும் நீர்த்தாங்கி விளைவற்று காணப்பட்டது. செயற்திட்டத்தின் மின்சாரக் கட்டணம் ரூபா 23,000 வரையில் நிலுவையாக உள்ளதுடன், வேறு எந்த நீர் செயற்திட்டங்களும் இல்லாத இந்த பிரதேசத்திலே நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரே ஒரு செயற்திட்டமான இந்த செயற்திட்டமும் இரண்டு வருடங்கள் காலமாக கைவிடப்பட்டிருந்தது.

### 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

#### 3.5.1 விளைவற்ற மற்றும் குறை உபயோகமான சொத்துக்கள்

ரூபா 124,921 பெறுமதியான 108 ஸ்ரீ 1706 இலக்க மோட்டார் சைக்கள், மிதிவண்டி மற்றும் ட்ரேலர் பவுசர் என்பன 04 வருடங்களிலிருந்து விளைவற்றுக் காணப்படுகின்றது.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 உள்ளகக் கணக்காய்வு

மீளாய்வாண்டிலே சபையின் செயல்நடவடிக்கைகள் சம்பந்தமாக கணக்காய்வொன்று இடம்பெற்றிருக்கவில்லை.

### 4.2 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்கள்

பிரதேச சபையினால் 2017 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழுக்களை உருவாக்கி கூட்டங்களை நடாத்தியிருக்கவில்லை.

**4.3 பெறுகைகள் திட்டம்**

பிரதேச சபையினால் 2017 ஆம் வருடத்திற்கான பெறுகைகள் திட்டமொன்றை ஒழுங்குபடுத்தி பெறுகைகள் நடவடிக்கைகளை திட்டமிட்ட வகையில் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**5. முறைமையும் கட்டுப்பாடும்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அடிக்கடி சபையின் அவதானத்திற்கு உட்படுத்தப்பட்டதுடன் கீழ்வரும் கட்டுப்பாட்டுத் துறைகளுக்கு எதிராக விசேட கவனம் செலுத்தப்பட வேண்டியுள்ளது.

| | கட்டுப்பாட்டுத் துறைகள் | | கவனம் செலுத்த வேண்டியவைகள் |
|---|---|---|---|
| (அ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | அனைத்து நிலையான சொத்துக்களும் ஏடுகளுக்குள் உள்ளடக்கப்பட்டு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை. |
| | | (ii) | நீக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதிகள் உரிய ஏடுகளிலிருந்து நீக்கப்படாமை |
| (ஆ) | கணக்கீடு | | பணம் ஒன்று சேர்த்தல் மற்றும் கணக்கலிடுதல் நாளதுவரையாக்கப்படாமை |
| (இ) | வருமான நிர்வாகம் | (i) | வருமான ஏடுகள் நாளதுவரையாக பேணப்படாமை |
| | | (ii) | நிலுவை வருமானங்களை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்காமை |
| (ஈ) | உள்ளகக் கட்டுப்பாடு | (i) | உள்ளகக் கணக்காய்வொன்று மேற்கொள்ளப்படாமை. |
| | | (ii) | கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுக்களின் கூட்டங்கள் இடம்பெற்றிராமை |
| (உ) | கடன்பட்டோர்/ கடன்கொடுத்தோர் கட்டுப்பாடு | (i) | பெற வேண்டிய மற்றும் செலுத்தவேண்டிய கணக்குகளின் மீதிகளை தீர்வு செய்யப்படாமை |
| (ஊ) | வாகனங்கள் கட்டுப்பாடு | (i) | எரிபொருள் சம்பந்தமாக பரீட்சித்தல் மேற்கொள்ளப்படாமை. |
| | | (ii) | வாகனங்கள் சம்பந்தமாக கணக்கெடுப்பு மேற்கொள்ளப்படாமை. |